**செய்தி வெளியீடு எண்: 023** **நாள்: 09.01.2019**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (9.1.2019) சென்னையில் நடைபெற்ற 45வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை தொடங்கி வைத்து ஆற்றிய உரை**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்று சென்னை தீவுத் திடலில் 45வது இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியை தொடங்கி வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவிலே
சிறப்புரையாற்றி அமர்ந்துள்ள
மாண்புமிகு துணை முதலமைச்சர்
**அண்ணன் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**
முன்னிலை உரையாற்றிய
மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத்துறை
அமைச்சர் **திரு.டி.ஜெயகுமார் அவர்களே!**
இந்த நிகழ்ச்சியிலே உரையாற்றிய
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
**அண்ணன் திரு.வெல்லமண்டி நடராஜன் அவர்களே!**
நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள
மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. செல்லூர் ராஜூ அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் சகோதரர் திரு.தங்கமணி அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் சகோதரர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. கே.பி.அன்பழகன் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் டாக்டர் வி.சரோஜா அவர்களே,
மாண்புமிகு அமைச்சர்
சகோதரர் திரு. உடுமலைப்பேட்டை ராதாகிருஷ்ணன்அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் சகோதரர் திரு. பா.பென்ஜமின் அவர்களே ,
மாண்புமிகு அமைச்சர் சகோதரி திருமதி வி.என்.ராஜலட்சுமி அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் சகோதரி திருமதி எஸ்.வளர்மதி அவர்களே,
மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற
மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தலைமைச் செயலாளர்

**முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே!**
இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர் அருமை சகோதரர் திரு.வெங்கடேஷ்பாபு அவர்களே,
திரு.விஜயகுமார் அவர்களே,
திரு. ஜெயவர்தன் அவர்களே,
முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு.சோமசுந்தரம் அவர்களே,
சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரர் தி.நகர் திரு. சத்யா அவர்களே,
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய
திரு.பாலகங்கா அவர்களே,
மற்றும் இந்த இனிய விழாவிலே கலந்து கொண்டு வரவேற்புரை ஆற்றிய அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் **திரு.அபூர்வ வர்மா அவர்களே!**
இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற நன்றியுரை ஆற்ற இருக்கின்ற
**திரு.வெ.பழனிகுமார் அவர்களே!**
இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
அரசு உயர் அதிகாரிகளே!
காவல் துறை உயர் அதிகாரிகளே!
மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கிற சுற்றுலா பயணிகளே,
இந்த நிகழ்ச்சி சீரோடும் சிறப்போடும் விளங்குவதற்கு ஏற்பாடு செய்த
சுற்றுலா அலுவலர்களே,
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!
பெரியோர்களே! தாய்மார்களே!

அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பொங்கல் என்றாலே அதனுடன் சேர்த்து நினைவுக்கு வருவது சென்னை தீவுத்திடலில் நடக்கும் இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி தான். பொழுது போக்கு அம்சங்களுடன் தமிழ்நாடு அரசுத்துறைகளின் நலத்திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் பொதுமக்கள் அறிந்துக் கொள்ள வாய்ப்பளிப்பதே இந்தப் பொருட்காட்சியின் நோக்கம். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் நடத்தப்படும்

45வது இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியை இன்று தொடங்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த ஆண்டு பொருட்காட்சியின் கருப்பொருள் Tourism and the Digital Transformation என்பதாகும். இப் பொருட்காட்சியில் 28 மாநில அரசுத்துறைகள், 16 மாநில பொதுத்துறை நிறுவனங்கள், 2 மத்திய அரசு நிறுவனங்கள், 4 பிற மாநில அரசு நிறுவனங்கள், இந்திய செஞ்சிலுவை சங்கம், தமிழ் நாடு சட்ட உதவி மையம் மற்றும் 60 தனியார் அரங்குகள் இந்த பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை மாண்புமிகு அம்மாவின் அரசு தடை செய்துள்ளது. இதற்கு பொது மக்களாகிய நீங்கள் அனைவரும் ஆதரவு அளிப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கின்றது. இந்த உயரிய கொள்கைக்கு இந்தப் பொருட்காட்சியில் முக்கியத்துவம் அளித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது பாராட்டுக்குரியது.

இந்த பொருட்காட்சியில் துபாயில் கட்டப்பட்டுள்ள உலகிலேயே மிக உயரமான கட்டடத்தின் மாதிரி வடிவம், கடல்வாழ் மீன் அருங்காட்சியகம், மேக கூட்டங்களை பிரதிபலிக்கும் மாதிரி ஆகிய சிறப்பு அம்சங்கள் இடம் பெற்றுள்ளன என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இதுபோன்ற பயனுள்ள விஷயங்கள் மட்டுமின்றி, பொழுது போக்கு நிகழ்ச்சிகளும் இந்த பொருட்காட்சியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள அண்ணா கலையரங்கத்தில் தினந்தோறும் நாட்டியம், நாடகம், இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் பிடித்த பல்வேறு விளையாட்டு சாதனங்கள் இந்த பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளன என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநில அரசின் ஆக்கப்பூர்வமான பணிகளையும், மக்கள் நலனுக்காக செயல்படுத்தப்படும் புதிய திட்டங்களையும், மக்கள் எளிதில் புரிந்துக்

கொள்ளும் வகையில் செயல்மாதிரிகளுடன் அரசுத்துறை அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மக்களின் மன மகிழ்வுக்கு மூலக் கூறாகவும், வேலை வாய்ப்பினையும், அன்னியச் செலாவணியையும் ஈட்டித் தருவதில் முக்கிய பங்கு வகிக்கும் சுற்றுலாவை மேம்படுத்துதல், தொடர்ந்து அதிகரித்து வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, புதிய சுற்றுலா மையங்களை தெரிவு செய்தல், சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு செயல்படுத்தி வருவதால், சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் இசை விழா நிகழ்ச்சிகளையும், நாட்டியாஞ்சலி நிகழ்ச்சிகளையும், நமது தமிழ்நாட்டிற்கே உரிய வீர விளையாட்டுகளையும் காண்பதற்கு மட்டுமின்றி, இந்தியாவின் மருத்துவ தலைநகர் என அழைக்கப்படும் தமிழ்நாட்டில் மருத்துவத்திற்கு வருபவர்களும், உயர்கல்வி நிறுவனங்களில் பயில்வதற்கு வரும் மாணாக்கர்களும் என தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வந்த வண்ணம் உள்ளனர்.

இது தவிர, தமிழ்நாட்டில் ஆன்மீகம் மற்றும் பொழுதுபோக்கும் சுற்றுலாத் தலங்கள் அதிக அளவில் அமையப் பெற்றுள்ளன. குறிப்பாக மலைகளின் ராணி– உதகமண்டலம், மலைகளின் இளவரசி–கொடைக்கானல் மற்றும் தென்னகத்தின் அணிகலன்–ஏற்காடு ஆகிய மலைவாசஸ்தலங்கள், உலகின் 2வது பெரிய சென்னை மெரினா கடற்கரை, உலகிலேயே மூன்று கடல்கள் சங்கமிக்கும் ஒரே இடம் –கன்னியாகுமரி, பல்லவர் வரலாறு பரப்பும் மாமல்லபுரம் ஆகிய சுற்றுலாத்தலங்கள், தமிழ்நாடு முழுவதும் கலைநயத்துடன் நிறைந்து காணப்படும் சிறப்புமிக்க ஆயிரக்கணக்கான கோயில்கள்,

கிறிஸ்துவ மற்றும் இஸ்லாமிய வழிபாட்டு தலங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை மிகவும் ஈர்த்துவருகின்றது. மேலும் யுனஸ்கோ நிறுவனம் Creative Cities Network என்று 64 நகரங்களை தேர்வு செய்துள்ளது. அவற்றுள், சென்னையை ‘‘இசை படைப்பாற்றல் மிக்க நகரமாக’’ தேர்வு செய்து சிறப்பித்துள்ளது. இதுதவிர, யுனஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னங்கள் ஐந்து தமிழ்நாட்டில் உள்ளன. ஆக மொத்தம் உலகின் பழமையான கலாச்சாரம், வரலாற்று சிறப்புமிக்க நினைவுச் சின்னங்கள், பிரமிக்கத்தக்க கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை, மனதை வசீகரிக்கும் இயற்கைத் தோற்றங்கள், வனப்பகுதிகள் முதலியவை தமிழ்நாட்டில் உள்ளன. சிறந்த சாலை வசதிகள் மற்றும் நான்கு பன்னாட்டு விமான நிலையங்கள் இங்கு அமைந்துள்ளன.

இதன்காரணமாக, 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது. மேலும், 2017 ஆம் ஆண்டில் முனைப்பாக சந்தைப்படுத்தியதன் விளைவாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாக அதிகரித்து, தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தைப் பெற்றுள்ளது. மேலும் 2017 ஆம் ஆண்டில் 34 கோடியே 50 லட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், 48 லட்சத்து 60 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் தமிழ்நாட்டிற்கு வந்து சென்றுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலாத்துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு நிகழ்த்திய சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்காக சுற்றுலாத்தலங்களை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து 46 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள், தமிழ்நாட்டின் கடற்கரை சுற்றுலாத்தலங்களில் 99 கோடியே 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள்,

ஆசிய வளர்ச்சி வங்கியிடம் சுற்றுலா வளர்சித் திட்டங்களுக்காக 218 கோடி ரூபாயில் பணிகள், என தமிழ்நாடு சுற்றுலாத்துறை பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியும், மேம்படுத்தியும் வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ❖ தமிழ்நாடு சுற்றுலாத்துறை சிறப்பான வளர்ச்சி பணிகளுக்காக பல்வேறு விருதுகளை பெற்று உள்ளது.
- ❖ குறிப்பாக டிராவல் லீசர் (இந்தியா மற்றும் தெற்கு ஆசியா) என்ற இதழ் வெளியீட்டாளர்கள் தமிழ்நாட்டை ‘‘இந்தியாவில் சிறந்த மாநிலம்’’ என்ற விருதை 2017 ஆம் ஆண்டிற்கு வழங்கியுள்ளனர்.

- ❖ பட்வா (Pacific Area Travel Writers Association) ‘‘சிறந்த ஆன்மீக சுற்றுலா மாநிலம்’’ Best State - Pilgrimage Tourism என்ற 2018ஆம் ஆண்டிற்கான சர்வதேச பயண விருதை தமிழ்நாடு மாநிலத்திற்கு வழங்கியுள்ளது.

- ❖ அதேபோல், 2019ஆம் ஆண்டிற்காக பட்வா வழங்கும் ‘‘சர்வதேச பயண விருது ‘‘பாரம்பரிய சின்னங்கள் நிறைந்த மாநிலம்’’ Best State - Heritage Tourism என்று தமிழ்நாடு மாநிலத்திற்கு அறிவித்துள்ளது.
- ❖ மேலும், இந்தியா டுடே நிறுவனத்தால், 2018ஆம் ஆண்டிற்கான சிறப்பான சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்ட சிறந்த மாநிலம் என்ற விருதையும் தமிழ்நாடு பெற்றுள்ளது.

இந்த விருதுகள் தவிர, தமிழ்நாடு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் சிறப்பான செயல்முறை உட்பட உயர்தரமான சுகாதார சேவைகளுக்கு

அங்கீகாரம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்கான விருதுகள் போன்ற எண்ணற்ற விருதுகளை ஒவ்வொரு துறையிலும் பெற்று, தமிழ்நாடு, இந்தியாவிலே அதிக அளவில் விருதுகளை பெறும் ஒரே முன்னணி மாநிலமாக திகழ்ந்து வருகிறது என்பதை இங்கே பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த சாதனைகளுக்காக அரசை பாராட்டாமல், ஒரு சிலர் இந்த அரசைப் பற்றி, வேண்டுமென்றே ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை மக்களிடத்திலே பரப்பி வருகிறார்கள். ஆனால் மக்கள் உண்மை நிலவரத்தை நன்கு அறிவார்கள். இதை சொல்லும்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு அடர்த்தியான காடு. அந்த காட்டில் நிறைய மிருகங்கள் வசித்து வந்தன. அந்த காட்டில் ஒரு பொந்தில் ஒரு முயல் ஒன்று வசித்து வந்தது. காட்டிலேயே இந்த முயல்தான் சற்று படித்த முயல். எனவே தனக்குத்தான் எல்லாம் தெரியும். இவர்கள் எல்லாம் படிக்காத முட்டாள் என்ற நினைப்பில் யாரையும் மதிக்காது.

இந்த முயல் மற்ற முயல்கள் போன்றதல்ல. எப்பொழுதும் அசாதாரண கற்பனையிலேயே மிதக்கும், நடக்காத காரியங்களை எல்லாம் நடந்து விட்டதாக கருதும். எந்த நேரமும் ஏதாவது சிந்தித்தப்படியே இருக்கும்.

இந்த முயல் ஒரு நாள் வெகுதூரம் ஓடிய களைப்பில் ஒரு பனை மரத்தடியில் கண்களை மூடிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தவாறு இருந்தது. அப்பொழுது ஒரு பனம் பழம் ஒன்று பொத்தென்று கீழே விழுந்தது. கண்களை முடியவாறு இருந்ததால், பனம் பழம் விழுந்ததை முயல் பார்க்க வில்லை. முயலின் சிந்தனை கலைந்தது. அது தன் ஆயுளில் இதுபோன்ற சத்தத்தை கேட்டதில்லை. உலகத்தை பற்றிய சிந்தனையில் இருந்ததால் ஒருவேளை உலகம்தான் புரண்டு விழுந்து விட்டதோ என்று நினைத்தது. இதனை நினைத்தவுடன் அதன் உடல் நடுங்கியது. இனி இங்கிருந்தால் நமது

உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் என்று நினைத்தவாறு தலை தெறிக்க ஓடியது.

வேகமாக ஓடிய முயலை வழியிலுள்ள மிருகங்கள் பார்த்து ‘‘ஏன் வேகமாக ஓடுகின்றாய் **?**’’ என்று கேட்டன. அதற்கு அந்த முயல், ‘‘உலகம் விழுந்து விட்டது. நாம் இங்கிருந்தால் ஆபத்து. அதனால் ஓடுகிறேன்’’ என்றது. இதனைக் கேட்ட மற்ற மிருகங்களும் ஓட ஆரம்பித்தன. எல்லாம் சிங்கத்திடம் சென்று இது பற்றி தெரிவித்தன.

உடனே சிங்கம் முயலைப் பார்த்து, ‘‘நீ அந்த நிகழ்ச்சியை நேரில் பார்த்தாயா **?**’’ என்று கேட்டது. ‘‘ நான் நல்ல வேளையாக கண்களை மூடிக்கொண்டிருந்தேன்’’ என்றது முயல்’’. எந்த இடத்தில் இந்த சம்பவம் நடந்தது **?**அந்த இடத்தைக் காட்டு என்றது சிங்கம்.

உடனே முயல் தான் படுத்திருந்த பனைமரத்திற்கு அழைத்து சென்றது. ‘‘இந்த பனை மரத்தடியில் இருக்கும்போது தான் உலகம் விழுந்ததை பார்த்தேன்’’, என்றது. சிங்கம் அங்கே சுற்றும் முற்றும் பார்த்து அங்கே பனம் பழம் விழுந்திருந்ததை பார்த்தது. ‘‘தன்னை புத்திசாலியாக காட்டிக் கொள்ளும் முயல், பனம் பழம் விழுந்ததை உலகம் விழுந்ததாக கற்பனை செய்துக் கொண்டு உங்களையே குழுப்பி விட்டது. உலகம் விழவில்லை’’ என்று சிங்கம் கூறியது. உண்மையை விளக்கிய சிங்கம், முயலின் அகங்காரத்தை ஒழிக்கும் வகையில் உரிய தண்டனை வழங்கியது.

முயல் போன்று, மக்களை குழப்புவதற்காக எதிர்கட்சிகள் கூறும் கற்பனை குற்றச்சாட்டுக்களுக்கு, சிங்கம் போல் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**அம்மா வழியில் ஆட்சி – அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி** என்ற தாரக மந்திரத்தோடு எங்களை எதிர்வருகின்ற தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து விட்டு தமிழ்நாட்டு மக்களுக்கு சேவை ஆற்றுவது மட்டுமே இலக்காக கொண்டு நாங்கள் உழைத்து வருகின்றோம்.

**“ஒரு நல்ல காரியத்தை செய்ய வேண்டும் என்ற லட்சியத்துடன் நல்லவர்கள் பலர் சேர்ந்து, நல்ல தியாக உணர்வுடன் நல்ல முறையில் மேற்கொள்கின்ற எந்த ஒரு உழைப்பும், முயற்சியும், பொது மக்களின் ஒத்துழைப்புடன், ஆதரவுடன் வெற்றி அடையும் என்பது நிச்சயம்” என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.**

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அவர்களின் வாக்கிற்கிணங்க, மக்கள் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்துகின்றது. மக்களின் ஆதரவோடு பல்வேறு சாதனைகளை படைத்து, மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியதுபோல், **நூறாண்டுக்கு மேல் அம்மாவின் ஆட்சி தொடரும்** என்று உறுதிப்பட தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த பொருட்காட்சியில் நேர்த்தியாக அரங்கங்களை அமைத்த அரசுத்துறை நிறுவனங்கள், அரசு பொதுத்துறை நிறுவனங்கள், மத்திய, பிற மாநிலத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

நன்றி! வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**